MCOP.No. 47/2020

Dated : 19.10.2023

Time: 12.00 p.m to 12.10 p.m

P.W- 1 சாட்சி செல்வி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3-ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை

1) இறந்துபோனவர் எனது தாயார். மற்ற மனுதாரர்கள் என் உடன்பிறந்தவர்கள். என்னுடைய வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 45 கிமீ தூரம் இருக்கும். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இறந்துபோன என் தாயார் கமலம் வீட்டில்தான் இருந்தார் என்றால் இல்லை. வேலைக்கு சென்றார். எனக்கு 42 வயது ஆகிறது. என் தாயாருக்கு 70 வயது இருக்கும் என்றால் சரியல்ல. என்னுடைய தாயாரின் வயது, வருமானத்தை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் என் உடன்பிறந்தவர்களும் திருமணமாகி தனித்தனியே வசித்து வருகிறோம்.

2) மேற்படி விபத்து குறித்து என் சகோதரர் மணிகண்டன் தான் காவல் துறையினரிடம் புகார் கொடுத்தார். டாடா ஏசி வண்டி ஒன்று காய்கறி விற்றுக்கொண்டு இருந்தது. அந்த வண்டி எண். TN 77 B 6823 என்றும் அந்த வ்ண்டியில்தான் என் தாயார் காய் வாங்கிக் கொண்டு இருந்தார் என்றும் அப்போது மற்றொரு வண்டியான TN 77 3532 என்ற வாகனம் மோதியது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காய்கறி விற்றுக்கொண்டிருந்த வண்டி மீது எந்த தவறும் இல்லை என்றால் அது தவறு. இரண்டு வண்டிகளும் தான் விபத்திற்கு காரணம். ஆனால் எந்த வண்டியின் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்று தெரியாது.

3) அந்த முதல் தகவல் அறிக்கை TN 77 3532 வாகனத்தின் மீது தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வாகனம் தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. மேலும் அந்த வாகனத்திற்கு காப்பீடு எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் நின்றுகொண்டிருந்த என்றும் எனவே அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேலும் மசாஆ.1 லும் அவ்வாறு உள்ளது என்றால் சரியல்ல.மேலும் 1-ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையால் தான்

இவ்விபத்து ஏற்பட்டது என்றும் 2,3 எதிர்மனுதாரர்கள் மனுவிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும் எனவே 1-ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீட்டை தரவேண்டும் என்றும் 2,3 எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal, Attur**